அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை
கொல்லா நெறி குவலயமெலாம் ஓங்குக!

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!!



# பிராணிகள் பேசுகின்றன

*உலகில் ஆறறிவுடைய உயர்ந்த பிறப்பாகிய மனித பிறப்பை பெற்றுக் கொண்ட அன்பு தாய்மார்களே! அருமை பெரியோர்களே! இனிய குழந்தைகளே! வணக்கம். நாங்கள் சொல்வதை கவனமாகக் கேட்டு கொஞ்சம் சிந்தியுங்கள்!!*

1. ஒரு உயிரை கொன்று அதன் மாமிசத்தை உண்டு உங்கள் வயிரை இடுகாடு ஆக்கிக் கொள்ளுங்கள் என்று எந்த அருளாளர்களும் சொல்லவில்லை. ஆதலால் நாங்கள் எந்த உயிரையும் கொல்வதில்லை. கொன்று அதன் மாமிசத்தை சாப்பிட்டு எங்கள் வயிரை இடுகாடு ஆக்கிக் கொள்வதில்லை.
**நீங்கள் எப்படி?**

2. நாங்கள் மதுபானம் குடிப்பதில்லை. போதைப் பொருள் உபயோகிப்பதில்லை! அதனால் எங்களுக்கு குடல் புண் வருவதில்லை.
**நீங்கள் எப்படி?**

3. நாங்கள் பீடி சிகரெட் புகைப்பதில்லை! மூக்கில் பொடி போடுவதில்லை! எங்களுக்கு புற்றுநோய் வருவதில்லை.
**நீங்கள் எப்படி?**

4. நாங்கள் புகையிலை போடுவதும், பான் பராக்கும் போட்டுக் கொள்வதில்லை. இதனால் புற்றுநோய்க்கு ஆளாவதில்லை.
**நீங்கள் எப்படி?**

5. நாங்கள் சூது ஆடுவதில்லை. பொருள் இழப்பதில்லை. அதனால் குடும்பம் கஷ்டப்படுவதும் இல்லை. பாரதத்தில் பாண்டவர்கள் சூது ஆடியதால் வீட்டையும், நாட்டையும் இழந்து வனவாசம் போகவில்லையா?
**நீங்கள் எப்படி?**

6. நாங்கள் பிறர் பொருள் மீது ஆசைப்படுவதில்லை! ஆசையின் காரணமாக திருடுவதில்லை.
**நீங்கள் எப்படி?**

7. இறைவன் எங்களுக்கு பேச்சுத்திறன் கொடுக்கவில்லை! கொடுத்திருந்தால் நாங்கள் எப்பொழுதும் பொய் பேச மாட்டோம்.
**நீங்கள் எப்படி?**

8. நாங்கள் பிறரைக் கண்டு பொறாமைப்படுவதில்லை. எதிரிகள் கெட்டுவிட வேண்டும் என்று எண்ணுவதில்லை.
**நீங்கள் எப்படி?**

9. நாங்கள் தானியத்தையும், பொன்னையும், பொருளையும் களஞ்சியத்தில் சேர்ப்பதில்லை. அதனால் உலோபித்தனம் எங்களிடம் இல்லை.
**நீங்கள் எப்படி?**

10. நாங்கள் பிறரை வஞ்சிப்பதில்லை! மோசம் பண்ணுவதில்லை! ஏமாற்றுவதும் இல்லை.
**நீங்கள் எப்படி?**

11. நன்மையும், தீமையும் பிறர் தருவதில்லை! நீங்கள் செய்யும் நன்மை தீமையே உங்களை வந்தடைகின்றது. முற்பகலில் ஒருவருக்கு நீங்கள் தீமை செய்தால் பிற்பகலில் அது தானாகவே வந்து உங்களை சேரும். இதனால் குடும்ப நலம் கெடும். இது எங்களுக்கு இல்லை!
**உங்களுக்கு எப்படி?**

12. உங்களுக்கு குடும்பங்களில் ஏதாவது துன்பம் வந்தால் அந்த துன்பம் நீங்குவதற்காக ஆடு, கோழி, ஆகிய எங்களை பலி கொடுப்பதாக இறைவனிடம் வேண்டுகின்றீர்கள். நாங்கள் அப்பாவி ஜீவர்கள். அதனால் எங்களை பலி கொடுக்கின்றீர்கள். எங்களுக்கு பதிலாக புலி, சிங்கத்தை பலி கொடுத்து நிறைய வரம் பெறலாமே! ஏன் செய்வதில்லை? அது உங்களை பலியாக்கிக் கொள்ளுமே!

பலியிட்ட எங்கள் உடம்பும், இரத்தமும் இறைவனுக்கு போய் சேருவதில்லை. உங்களுடைய பரிசுத்தமும் நல்ல பண்புகளுமே இறைவனை சேரும். எங்களை பலிகொடுத்து புண்ணியம் பெறுவதாக நினைத்து பாவத்தை சம்பாதித்துக் கொள்ளாதீர்கள். ஒரு உயிரை கொல்லாத விரதமே கடவுளுக்காக இருக்கும் விரதம்.
**நீங்கள் எப்படி? பரிசுத்தமானவரா? பண்புடையவரா?**

13. எங்களுக்கு ஜாதி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள் கிடையாது. இது பொய் என்று வள்ளலார் கூறுகின்றார்.

எல்லோருக்கும் கடவுள் ஒருவரே. அதுபோல் மனிதகுலம் எல்லாம் ஒன்றே. உலக உயிர்கள் எல்லாமே சகோதரர்கள் என்பதை வள்ளலார் கூறுகின்றார். இதை ஏற்றுக்கொண்டு நாங்கள் கூடி வாழ்கிறோம். **நீங்கள் எப்படி?**

14. எங்களுக்கு கடவுளை வழிபாடு செய்யவும், கடவுளை துதிக்கவும் முடியாத நிலை. எங்களுக்கு வாய் இருந்தாலும் அது உணவு சாப்பிட மட்டும்தான் பயன்படுகிறது.

உங்களுக்கு அப்படி அல்ல, நல்லதை பேசவும், இறைவனை துதிக்கவும் முடியும். ஆதலால் தினமும் சிறிது நேரமாவது வாயால் பாடி, தலையால் வணங்கி, கையால் தொழுவது மனத்தினால் சிந்தித்து ஒழுக்கத்துடன் இருங்கள். மனித பிறப்பே கடவுளை தெரிந்து, அருளை அடைந்து பிறவிப் பிணியை போக்கிக் கொள்வதற்குத் தான் !
**இது எங்களுக்கு முடியாத காரியம். உங்களுக்கு எப்படி?**

15. சொர்க்கமும், நரகமும் இறந்த பிறகு இல்லை. நீங்கள் இந்த உலகத்தில் வாழும்போதே அனுபவிப்பதுதான். நல்லவர்கள் வாழும் இடமே சொர்க்கம். தீயவர்கள் வாழும் இடமே நரகம். நல்ல செயல்கள் செய்வது சொர்க்க வாசம். தீய செயல்கள் செய்வது நரக வாசம். பிற உயிர்கள் மீது இரக்கப்படுவதே கடவுள் வழிபாடு என்பது வள்ளலாரின் போதனை. இதை சிந்திக்கும் திறன் எங்களுக்கு இல்லை.
**உங்களுக்கு எப்படி?**

16. இரக்கமும், ஈதலும் உடையவர்களே பண்புடைய பெரியவர்கள். உலோபி ஒருவனுடைய செல்வம் பிறருக்கு பயன்படாததால் அது நடுவூரில் நச்சு மரம் பழுத்தது போன்றது.

உபகார குணம் உடையவர்களுடைய செல்வம் நடுவூரில் நல்ல பழம் பழுக்கும் மரம் இருப்பது போலாகும்.

பனை மரம் ஒருவர் நிற்கக்கூட நிழல் தாராது. ஆல மரம் பலருக்கு உணவும், நிழலும் தந்து நீண்டகாலம் வாழ்கிறது. இந்த வாய்ப்பு இறைவன் எங்களுக்கு அளிக்கவில்லை.

**நீங்கள் எப்படி? பனை மரமா? ஆலமரமா?**

17. உயிர்களிடம் இரக்கப்படுவதும், ஜீவர்களுக்கு செய்யும் தொண்டே கடவுள் வழிபாடு என்கின்றார் வள்ளல் பெருமான்.

ஜீவ காருண்யமே மோட்ச வீட்டின் திறவுக்கோல். (சாவி)

எல்லோரிடமும் அன்பு காட்டுங்கள். அன்பே கடவுள்.

திருந்தும் உள்ளமே இறைவன் குடியிருக்கும் திருக்கோயில். மனத்தால் நினைப்பது சொல்லாக வருகின்றது. சொல் செயலாகின்றது. இந்த மூன்றும் தூய்மையாக இருந்தால் உலகில் ஒருவருக்கும் தீங்கு இல்லை. இதைப் படித்த ஒவ்வொரு மனிதனும் மனம் திருந்தினால் இந்த உலகம் தேவர்கள் வாழும் தேவலோகமாக மாறிவிடும். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இது எங்களுக்கு அடுத்த பிறவியிலாவது கிடைக்கட்டும். நீங்கள் எப்படி செய்வீர்கள். இந்தப் பிறவியிலேயே பெறுவீர்களா?

18. நாங்கள் பிறந்து பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் எங்கள் நிலை அப்படியே உள்ளது. எந்த மாற்றமும் எங்களிடம் இல்லை.
நீங்கள் அப்படி அல்ல, பிறந்த ஆதி காலத்தை விட தற்காலம் அறிவு வளர்ச்சி பெற்றுள்ளீர்கள். கால சூழ்நிலைக்கேற்றவாறு மாறி வாழ்பவன் மனிதன். இது உங்களால் முடியும். ஆளும் வளரனும், அறிவும் வளரனும் அதுதான் வளர்ச்சி. இன்னும் பழைய சம்பிரதாயங்களை பிடித்துக் கொண்டு இருக்கிறீர்கள். மூடப் பழக்கவழக்கங்களை கைவிட்டு சிந்தித்து அறிவிளக்கம் பெற்று செயல்படுங்கள். நல்லவர்களாகவும், புனிதர்களாகவும் வாழுங்கள். இதுவே எங்களுடைய பணிவான வேண்டுகோள்.
நாங்களும் உங்களுக்காக இறைவனிடம் வேண்டி பிரார்த்தித்துக் கொள்கிறோம்.
இதை எல்லாம் அறிந்து கொண்டு நல்ல பாதையில் நடக்க மணிமங்கலத்தில் உள்ள வள்ளலார் சேவா ஆசிரமத்தையும், மற்ற இடங்களில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தையும் நாடுங்கள். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ஒன்றே உங்களை நல்ல மனிதராக வாழ வழிகாட்டும். வள்ளலார் போதனைகளை கேளுங்கள். வன்முறைகளை கைவிட்டு அமைதியாக நல்லபடி வாழுங்கள். நலம் பல பெறுவீர்கள்.

**நன்றி வந்தனம்**

**வாழி இவ்வையகம்! வாழி சன்மார்க்க மாண்பு கொண்டு!!!**

வெளியிட்டவர் :
**K. மனோகர்,**
2/204, அம்பேத்கார் தெரு,
அருள்முருகன் நகர், பொழிச்சலூர்,
சென்னை - 600 074.
Cell : 98414 50782

தொகுத்தவர் :
**சாது சுப்பிரமணியம்**
**திரு அருட்பிரகாச வள்ளலார் சேவா ஆசிரமம்**
1/320A, வள்ளலார் சாலை, இந்திரா நகர்,
மணிமங்கலம் - 601 301. காஞ்சிபுரம் மாவட்டம்.
தொலைபேசி : 98413 79306, 2719 0473